3. தகவல் கோரல்.

முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டிய வினுக்கள் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். நீண்டகாலமாகப் பொறுத்திருந்து கேட்கிறேன். நம் மேலவை விதி 35-ன் பிரகாரம், ஒரு கேள்வி அனுமதிக்கப்பட்ட பின்னர், 42 நாட்களில் பதிலளிக்கப்பட வேண்டும். குறிப்பாக முதலமைச்சர் அவர்களின் கேள்விகள் அனுமதிக்கப்பட்டு, 3 மாத காலம் ஆகின்றது. இன்னும் அந்தக் கேள்விகளுக்கு விடை வரவில்லை. இந்த அவையில் வேறு அமைச்சர்கள் மூலமாகவாவது அந்தக் கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இலாகா குறித்த கேள்விகளுக்கான பதில்களைச் சொல்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22 ஆம் தேதியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு சில பணிகளிலே ஈடுபட்டிருந்ததால், இந்தக் கூட்டத் தொடரில் ஆரம்பத்திலேயே எடுத்துக்கொள்ள முடியவில்லை. 22 ஆம் தேதியிலிருந்து வரிசைக்கிரமமாக எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட வினுக்களை இத்தோடு பல முறைகள் இந்த அவையிலே தங்கள் மூலம் கிளப்பி ஆயிற்று. இதைவிட வேறு பணிகள் முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கின்றன என்று முன்னவர் அவர்கள் சொல்கிறார்கள். சட்ட மன்றப் பணியைத் தவிர வேறு பணி என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பேரவையில் கேட்டால் மேலவைப்பணி என்கிறார்கள், மேலவையில் கேட்டால் பேரவைப் பணி என்கிறார்கள். இப்படி அந்த அவையிலேயும் கேட்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு இந்தப் பணியைவிட வேறு என்ன பணி மூக்கியமான பணி? கொடுத்த கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கு வர வேண்டும். மேலவையில் கேள்வி நேரத்தில் இருந்து பதில் அளிப்பதை விட வேறு முக்கியமான பணி என்ன என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன். அவைகளை ஒத்தி வைத்திருப்பதற்கு என்ன சமாதானம் சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத்தலைவர் அவர்களே, சட்ட மன்றம் நடக்கின்ற நேரத்திலே, சட்ட மன்றப் பணிதான் முக்கியமானது என்பதை யாரும் மறுக்க முடியாது. சமீபத்தில் நடைபெற்ற என். ஜி. ஓ.-க்கள் பிரச்சினைகள், மற்ற சம்பவங்கள், இவைகளையெல்லாம் தொடர்ந்து பல சூழ்நிலைகள் இருந்த காரணத்தினுலே, வர முடியவில்லை. சமீபத்திலே டெல்லிக்குச் சென்று நேற்று திரும்பி வந்திருக்கிறுர்கள். முதல்வர் அவர்கள் இப்படித் தொடர்ந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறுர்கள். அவர்கள் 22 ஆம் தேதியிலிருந்து கேள்விகள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறுர்கள். கேள்விகள் எடுத்துக்கொள்ளும்போது, சில சந்தர்ப்பங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பதிலாக முன்னவராக இருப்பவர் கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கு அனுமதி அளித்திருக்கிறுர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இதைக் குறித்து நீண்ட விவாதமாக ஒவ்வொருவரும் எழுந்து பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் 22 ஆம் தேதி என்று சொல்லியிருக்கிறுர்கள்.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் குறிப்பிட்ட 22 ஆம் தேதி முதல் அந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன். 22 ஆம் தேதியிலிருந்து, இதுவரை எவ்வளவு கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனவோ அத்தனை கேள்விகளுக்கும் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் பதில் அளிப்பார்களா அல்லது வேறு அமைச்சர் யாராவது பதில் அளிப்பார்களா என்பதைப் பற்றியாவது தெரிவிப்பார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நான் அவை முன்னவர் அவர்களையும் நமது இலாகா அலுவலர்களையும் கலந்து பதிலளிக்க ஏற்பாடு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவரவர்களே, கேள்விகளுக்கு இன்னுர்தான் பதில் அளிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வராத சந்தர்ப்பத்தில் அவர்கள் சார்பாக நான் கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். 22 ஆம் தேதியிலிருந்து கேள்விகளை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சில சமயங்களில் முக்கியத்துவம் குறித்து தான் கேள்விகள் போடுகிறோம். உரிய காலத்திலே பதில் சொல்லவில்லை என்றால், அதற்குப் பயன் இல்லாமல் போகிறது. அப்படி முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளுக்காவது முதலமைச்சர் அவர்கள் இல்லாத சந்தர்ப்பத்திலும் பதில் சொல்ல வேண்டும். இதை மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உத்தரவாதம் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது குறித்து முன்னவர் அவர்களே ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

திரு. கோ. சி. மணி: மேலவையில் பலமுறை இதைப் பற்றியே திரும்பத் திரும்பப் பேசுகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நானும் அதைப் பற்றி கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4, அரசின் தீர்மானம்

சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'சமுதாய வளர்ச்சி — ஊராட்சி வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள்' *பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்....

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'சமுதாய வளர்ச்சி — ஊராட்சி வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்', பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

---

*5501-534, ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.